# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 107/நகராட்சி/2018**
**நாள் : 05/02/2020**

**திரு K. முகமது ஆகில்,**
**பேர்ணாம்பட்டு.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்/**
**மேலாளர்/கணக்கர்,**
**பேர்ணாம்பட்டு நகராட்சி,**
**பேர்ணாம்பட்டு.** – **எதிர் மனுதாரர்கள்**

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, 2–வது புது வீதி, 2/1 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. முகமது ஆகில் அவர்களின் 10.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 107/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்கள் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, 2–வது புது வீதி, 2/1 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. முகமது ஆகில் என்பவர், பேர்ணாம்பட்டு நகராட்சியில் நடைபெற்ற கீழ்க்காணும் முறைகேடுகளைத் தெரிவித்து சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, சுகாதார பணிகளுக்கான பொருட்கள் மற்றும் மின் சாதனங்கள் வாங்கியதில் ஊழல் செய்தது ;

(2) இரண்டு ஆண்டுகளாக எந்தவிதமான டெண்டர்கள் விடாமலும், மக்களுக்கு எந்தவொரு அடிப்படை வசதி செய்து தராமலும் மகளிர் சுயஉதவி குழுக்கள் பெயரில் காசோலைகள் வழங்கி முறைகேடாக பணம் கையாடல் செய்தது ;

(3) அம்மா உணவகத்தில் பணிபுரியும் பெண்கள் அரிசி, பருப்பு முதலிய உணவுப் பொருட்களை கடத்துவது மற்றும் இம்முறைகேட்டிற்கு கணக்கர் மாயிகிருஷ்ணன் உடந்தையாக இருப்பது ;

(4) டெங்கு காய்ச்சல் ஒழிப்புக்கு 20 நபர்களை பணியமர்த்திவிட்டு 150 பணியாளர்கள் வேலை செய்ததாக போலிபட்டியல் தயார் செய்து காசோலை வழங்கியது ; மற்றும் அமைக்கப்படாத குடிநீர் குழாய்க்கு ரூ.5 லட்சம் கணக்கு காட்டுவது ;

2. மேற்குறிப்பிட்ட குற்ற முறையீடுகள் குறித்து நகராட்சி ஆணையாளரின் அறிக்கை பெறப்பட்டது. மேற்படி அறிக்கையில், டெங்கு காய்ச்சலுக்கு பாதிப்புக்குள்ளாகி, 01.07.2017 முதல் 30.07.2017 வரையிலான காலத்தில் 3 குழந்தைகள் காலமானதால் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சுகாதாரத் துறை உயரதிகாரிகளின் ஆணையின்படி முறையாக மன்ற அனுமதி பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்த சம்பளத்தின் அடிப்படையில் கொசுப்புழு ஒழிக்கும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர் என்றும்

இதில் எந்தவித முறைகேடும் இல்லை என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மின் உபகரணங்கள் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்கப்பட்டதென்றும், ரூ.5 லட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் மன்ற அனுமதி பெறப்பட்டு முறையான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டே பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன என்றும், அம்மா உணவகப் பொருட்கள் வழங்குவது சம்பந்தமான பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றும், தவறுகள் நடக்காவண்ணம் கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப் படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். நகராட்சிப் பணியாளர்கள் முறையீட்டு மனுதாரருக்கு சாதகமாக செயல்படவில்லையெனில் இது போன்று புகார்களை தெரிவித்து மிரட்டுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார் என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு புகார் மனு அனுப்பிவிட்டு, அம்மனு தன்னால் அனுப்பப்படவில்லை என முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளதையும் நகராட்சி ஆணையர் சுட்டிக்காட்டியுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 01.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையில் தான், நான்குமுறை தொடர்ந்து நகராட்சி உறுப்பினராக தேர்வு செய்யப் பட்டதையும், துணைத் தலைவர் மற்றும் மன்றத் தலைவர் பொறுப்பில் இருந்ததாகவும், டெங்கு காய்ச்சல் பரவமாலிருப்பதற்கு நகராட்சிக்கு தான் உள்பட, சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நல்கிய முழு ஒத்துழைப்பினையும் குறிப்பிட்டார். தனது முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்த குற்ற முறையீடுகளை விசாரணையின் போதும் உறுதி செய்தார். மேலும், ஒரு மாத கால அவகாசம் வழங்கினால் முறைகேடுகளுக்கு ஆதாரமான ஆவணங்களை சமர்ப்பிப்பதாகவும் அதுவரை இறுதி ஆணை வெளியிடவேண்டாமெனவும் விசாரணையின் போது கேட்டுக்கொண்டார்.

4. நகராட்சி ஆணையாளரின் பிரதிநிதியாக செயல்படும் நகராட்சிப் பொறியாளரிடம் 20.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனக்கு சாதகமாக நகராட்சிப் பணியாளர்கள் செயல்படவில்லையெனில், அவர்கள் மீது புகார் மனுக்களை அனுப்பி மிரட்டுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார் என்று தனது அறிக்கையில் தெரிவித்த விவரத்தினை விசாரணையின் போதும் உறுதி செய்தார். மேலும், முறையீட்டு மனுதாரருக்கு சொந்தமான டிராக்டர் மூலம் நகராட்சி குடிநீர் தொட்டியில் திருட்டுத் தனமாக குடிநீர் எடுத்ததற்கு காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார். மேலும், முறையீட்டு மனு எண்.108/ந/18, நாள் 06.05.2019–ல் இம்முறைமன்ற நடுவம் ஆணையிட்டவாறு ரூ.5,000/– அபராதத் தொகையினை இதுவரை செலுத்த வில்லை என்றும் குறிப்பிட்டார். இப்புகார் மனு, நகராட்சிப் பணியாளர்களை மிரட்டுவதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார்.

5. எதிர்மனுதாரர்களான முன்னாள் நகராட்சி ஆணையாளர் திரு சி. ஸ்டான்லி பாபு மேலாளர் திரு எம். தாமோதரன், ஓய்வுபெற்ற உதவியாளர் திரு வி. மாயகிருஷ்ணன் மற்றும் நகராட்சியின் முன்னாள் துப்புரவு ஆய்வாளர் திரு V. குமார் ஆகியோரிடமும் 09.09.2019 மற்றும் 16.09.2019 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. நகர்மன்றம் செயல்பாட்டில் இருந்த பொழுதும் மற்றும் அதற்குப் பின்பும் உரிய மன்ற ஒப்புதல் பெற்றே பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முன்னாள் நகராட்சி ஆணையாளர் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், நகராட்சி நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து திருட்டுத் தனமாக குடிநீர் எடுத்ததை மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி காவல் துறையில் முறையீட்டு மனுதாரர் மீது புகார் செய்யப்பட்டதென்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

6. முறையீட்டு மனுதாரரிடம் 01.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனக்கு ஒருமாத கால அவகாசம் அளித்தால் இயன்றளவு ஆதாரங்களைத் திரட்டி சமர்ப்பிப்பதாக விசாரணையின் போது தெரிவித்தார். ஆனால் இன்றைய நாள்வரை எந்தவித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சாட்சியாளர்களையும் விசாரணைக்கு உட்படுத்தத் தவறியுள்ளார். அம்மா உணவகத்தில் பணிபுரியும் பெண்களுக்கு கணக்கர் மாயி கிருஷ்ணன் உறுதுணையாக உள்ளார் என்றும் மாதா மாதம் நகராட்சியின் பணம் கொள்ளை அடிக்கப்படுகிறது என்றும் இது சம்பந்தமாக பல பத்திரிக்கைகளில் செய்தி வந்துள்ளது என்று தெரிவித்துள்ள மனுதாரர் அப்பத்திரிக்கைச் செய்திகளின் நகல்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். எனினும், பேர்ணாம்பட்டு நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் நகராட்சி காவலர்களை மிரட்டி தினந்தோறும் இரவில் டிராக்டர் மூலம் தண்ணீரை திருடி அக்குடிநீரை வி. கோட்டா சாலையில் உள்ள முறையீட்டு மனுதாரரின் கட்டுமானப் பணிக்கு பயன்படுத்தியது குறித்து 2017–ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளிவந்துள்ள பத்திரிக்கைச் செய்தி

இம்முறைமன்ற நடுவ கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் நான்கு முறை மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு அக்காலங்களில் துணைத் தலைவராகவும் மற்றும் தலைவர் பொறுப்பிலும் இருந்துள்ளார். மன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்த முறையீட்டு மனுதாரர் ஆதாரமற்ற புகார்களைத் தெரிவித்து நகராட்சி அலுவலர்களுக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது கண்டிக்கத் தக்கது. மேலும், வேறு ஒரு நேர்வில் ஆதாரமற்ற புகார்களைத் தெரிவித்து நகராட்சி நிர்வாகத்திற்கும், நகராட்சி அலுவலர்களுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் புகார் தெரிவித்தது சம்பந்தமான விசாரணைக்கு வரத் தவறியதுடன், உரிய ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியதற்காக ரூ. 5,000/– செலவினத் தொகையாக செலுத்த வேண்டுமென 06.05.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நகராட்சி நிர்வாகத்திற்கும் நகராட்சி அலுவலர்களுக்கும் களங்கம் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆதாரமற்ற இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு, **பிப்ரவரி** திங்கள், 5–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப் பதிவாளர்.

பெறுநர்

1. திரு K. முகமது ஆகில்,
எண்.2/1, 2–வது புதுவீதி,
**பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
**பேர்ணாம்பட்டு நகராட்சி, வேலூர் மாவட்டம்.**

3. **திரு சி. ஸ்டான்லி பாபு,**
**நகராட்சி ஆணையர்,**
**திருவத்திபுரம் நகராட்சி,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

4. **திரு M. தாமோதரன்,**
**மேலாளர்,**
**பேர்ணாம்பட்டு நகராட்சி,**
**பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம்.**

5. **திரு V. மாயகிருஷ்ணன்,**
**கணக்கர் (ஓய்வு),**
**எண்.36, சுந்தரம் தெரு,**
**சுவால் பேட்டை, அரக்கோணம் – 631 001.**
**வேலூர் மாவட்டம்.**

6. **திரு V. குமார்,**
**சுகாதார ஆய்வாளர்,**
**கிருஷ்ணகிரி நகராட்சி,**
**கிருஷ்ணகிரி.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**